வுடைய தேவையைக் கருதி, பதினைந்து படுக்கைகளைக் கொண்ட ஒரு 'வார்டு' அந்த மருந்தகத்தில் அமைக்கப்படுவதற்கு 74,000 ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்க 30—7—1971-இல் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உத்தரவிட்டதற்குப் பின்னால், அது பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட வேண்டும். அவர்கள் அதற்கான டெண்டர் கோரி, அதற்குப் பின்னர்தான் கட்ட வேண்டும். எனவே, அது மற்றொரு துறையின் பரிசீலனையிலும் நடைமுறையிலும் இப்பொழுது இருக்கும்.

* 172 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to upgrade the Tengapattanam Government Dispensary in Kanyakumari district into a Hospital; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.

THIRU N. DENNIS : Sir, may I know whether Government would construct separate wings for women in view of the large Muslim population in that area?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்கம் மேற்கொள்ளுகிற எந்த ஒரு விதமான மருத்துவ வளர்ச்சிப் பணியும் சில முறைகளோடும் சில முன்னுரிமைப் பிரச்சினைகளோடும் சேர்த்து எண்ணப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இப்போதுள்ள தேங்காப்பட்டணம் மருத்துவமனை அரசாங்கக் கட்டடமாக அமைந்திருக்கிறது. அதற்கு மேற்பட அதிகமாகச் செய்வதற்கு இப்பொழுது அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

சூலூர் அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்கூடம்.

* 173. வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி சூலூரில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் பிரிவு ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திருவாரூர் அரசு மருத்துவமனைக்குக் கட்டடம்.

* 174. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் உள்ள அரசினர் மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுச் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 10.90 லட்சங்கள் ஆகும்.

Buildings for Primary Health Centres

* 175 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Primary Health Centre of Vallam Panchayat Union, Gingee taluk is functioning in a rented building; and

(*b*) if so, whether there is any proposal under the consideration of the Government to provide it with a building of its own?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

* 176. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டியில் பிரதம சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கும்முடிப்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் முறைப்படி கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

N.C.C. Training camp at Red Hills

* 177 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any Medical Unit of the N.C.C. was held in Red Hills about December 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தேசிய மாணவர்படை, மாணவ, மாணவியரின் முதுநிலைப்பிரிவின், ஒருங்கிணைந்த ஆண்டுக்குரிய பயிற்சி முகாம் ஒன்று, முகாம் தளவாய், மேஜர் பி.ஏ., குரூஸ் அவர்களால், செங்குன்றத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் முதல் 1971 சனவரி 4-ம் நாள் வரை நடத்தப்பட்டது. இதில் சென்னை, மதுரை, வேலூர் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள மருத்துவ மாணவர்கள் பிரிவுகளும் இதர பிரிவுகளுடன் பங்கு கொண்டன.

THIRU N. DENNIS : May I know whether Government would take steps for conducting such camps in other rural areas?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது ரூரல் ஏரியாவா, அர்பன் ஏரியாவா என்ற பிரச்சினையைப் பொறுத்தல்ல. தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய பயிற்சியைத் தாங்களே வளர்த்துக் கொள்ளுவதற்கு ஏற்றவிதத்தில் அந்தப் பயிற்சியை முகாம் மூலமாகப் பெறுகிறார்கள்.